# மேனிலை இரண்டாமாண்டு

# பகுதி II - பொதுத்தமிழ்

## வினாத்தாள் மாதிரி

**Higher Secondary - Second Year**
**Part II - Tamil (General)**
**Sample Question Paper**

தயாரிப்பு
கேரள மாநிலக் கல்வியராய்ச்சி மற்றும் பயிற்சி நிறுவனம்
திருவனந்தபுரம் - 12

# பாட ஏற்பாட்டு இலக்குகள்

1. இலக்கிய நயம், பண்பாடு, மரபு, நீதி, காப்பியப் பண்பு அறிதல்.
2. பேச்சு, நடிப்பாற்றலை வளர்த்தல், நாடகம் எழுதுதல், தனித்தன்மை அறிதல்.
3. சொற்றொடர், மரபுத்தொடர் பயன்படுத்த அறிதல்; சொல்வளம் பெருக்குதல்.
4. சமயம், புராணம் மற்றும் இதிகாச இலக்கியங்களை அறிதல்; தொடர்புகளை அறிதல்.
5. இலக்கியங்கள் நாட்டுப்புற இலக்கியங்கள் அறிதல், ஒப்பீடுசெய்தல்.
6. பல்வேறு மொழிநடைகளை அறிதல்.
7. நகைச்சுவை மற்றும் கற்பனைத் திறன்களை வளர்த்தல்.
8. மரபுக்கவிதை, புதுக்கவிதை மறுமலர்ச்சிப் பாடல்கள் பற்றி அறிதல்; அவற்றின் ஒற்றுமைகளைப் புரிதல்.
9. பிறமொழி இலக்கியங்களை அறிதல்; தமிழ் - மலையாளத் தொடர்புகள் அறிதல்.
10. படைப்பாற்றலை வளர்த்தல் (கவிதை, கதை, கட்டுரை, கடிதம், நாடகம், சொற்பொழிவு, வருணனை, உரைக்கோவை, உரைச்சித்திரம் போல்வன) / வடிவமாற்றம் செய்தல்.
11. மொழிப்பயிற்சி, மொழிபெயர்ப்புத்திறன் பெற்றிடல்.
12. அறிவியல் தமிழின் அருமை பெருமை அறிதல்.
13. நாட்டுப்புறக் கலைகள் மற்றும் மருத்துவத்தின் சிறப்புகளை அறிதல்.
14. ஊடகத்தமிழின் வளர்ச்சி - செய்திகள் சேகரித்தல், நிகழ்ச்சிகள் தயாரித்தல், திறனாய்வு செய்திடல்.
15. திரைக்கதை, வசனம், பாடல், விளம்பரம், தகவல், துணுக்கு போல்வன எழுதுதல்.
16. சிறுகதை எழுதல்; சிறுகதை - புதினம் வேறுபாடு அறிதல்.
17. வட்டார வழக்குகளை அறிதலும் நல்ல தமிழில் எழுதுதலும்.
18. நிறுத்தற்குறிகள் அறிதல்.
19. மொழியமைப்பு அறிதல் (எழுத்து, சொல், விளக்கம், வாக்கிய அமைப்புகள்).
20. அறிவிப்பு, விளம்பரம், சுவரொட்டி, நிகழ்ச்சி நிரல், பத்திரிகைச்செய்தி போன்றவை தயாரித்தல்.
21. தற்கால இதழ்கள்/ நாளிதழ்கள் அறிமுகம் ஆதல், வேறுபாடு அறிதல்.

❑❑❑

www.StudyGuideIndia.com

**மாதிரி : 1 (Sample : 1)**

## I. Weightage to Cluster of Cos/ Content area (Unit)

| Sl.No | Cluster of COs/ Content area (Units) | No. of Questions | Score | Percentage % | Time Minutes |
|---|---|---|---|---|---|
| 1 | Unit 1 : பழங்காலத்தமிழ் இலக்கியம் | 1 | 6 | 7.5 | 10 |
| 2. | Unit 2 : இடைக்காலத் தமிழ் இலக்கியம் | 2 | 14 | 17.5 | 25 |
| 3. | Unit 3 : தற்காலத் தமிழ் இலக்கியம் | 2 | 12 | 15 | 23 |
| 4 | Unit 4 : ஆய்வும் திறனாய்வும் | 2 | 14 | 17.5 | 27 |
| 5 | Unit 5 : மொழியும் மொழிபெயர்ப்பும் | 3 | 16 | 20 | 30 |
| 6 | Unit 6 : அறிவியலும் ஆராய்ச்சியும் | 2 | 10 | 12.5 | 20 |
| 7 | Unit 7 : கலையும் ஊடகமும் | 1 | 8 | 10 | 15 |
| | **மொத்தம்** | **13** | **80** | **100** | **150** |

## II. Weightage to type of Questions

| Sl.No | Type of Questions | No. of Questions | Score | Percentage % | Time Minutes |
|---|---|---|---|---|---|
| 1 | Objective | - | - | - | - |
| 2 | Short Answer | 6 | 30 | 37.5 | 54 |
| 3 | Essay | 5 | 36 | 45.0 | 69 |
| 4 | Others | 2 | 14 | 17.5 | 27 |
| | **Total** | **13** | **80** | **100** | **150** |

# BLUE PRINT

| Sl.No | Cluster of COs/ Content area (Units) | Objective | Short Answer | Essay | Others | Total |
|---|---|---|---|---|---|---|
| 1 | அலகு -1<br>பழங்காலத் தமிழ் இலக்கியம் | - | (6)<br>1 | | | (6)<br>1 |
| 2. | அலகு -2<br>இடைக்காலத் தமிழ் இலக்கியம் | - | (6)<br>1 | | (8)<br>1 | (14)<br>2 |
| 3. | அலகு -3<br>தற்காலத் தமிழ் இலக்கியம் | - | (4)<br>1 | (8)<br>1 | | (12)<br>2 |
| 4 | அலகு -4<br>ஆய்வும் திறனாய்வும் | | | (14)<br>2 | | (14)<br>2 |
| 5 | அலகு -5<br>மொழியும் மொழிபெயர்ப்பும் | | (10)<br>2 | | (6)<br>1 | (16)<br>3 |
| 6 | அலகு -6<br>அறிவியலும் ஆராய்ச்சியும் | | (4)<br>1 | (6)<br>1 | | (10)<br>2 |
| 7 | அலகு -7<br>கலையும் ஊடகமும் | | | (8)<br>1 | | (8)<br>1 |
| | **மொத்தம்** | | **(30)<br>6** | **(36)<br>5** | **(14)<br>2** | **(80)<br>13** |

# மேனிலை இரண்டாமாண்டு - பகுதி II - பொதுத்தமிழ்

## வினாத்தாள் மாதிரி

## HSE - Part - II - Tamil (General) Sample Question Paper

வகுப்பு : 12

மதிப்பெண் : 80

காலம் : 2.30 மணி

- *எல்லா வினாக்களுக்கும் விடை எழுத வேண்டும்.*
- *ஒவ்வொரு வினாவுடன் தொடர்புடைய குறிப்புரைகளைப் படித்துப் புரிந்து கொண்ட பின்னரே விடை எழுத வேண்டும்.*
- *ஒவ்வொரு வினாவுக்குமுரிய மதிப்பெண் அந்தந்த வினாவுக்கு நேர் எதிரே கொடுக்கப்பட்டுள்ளது.*

www.StudyGuideIndia.com

1. **பண்ணைக்காரரின் தோற்றம்**

மாறு கண்ணும் பருத்திப்பைக்
கூறு வயிறும் - கீரை
மத்துப் போல்தலையும் சுரை
வித்துப்போல் பல்லும்
நீறுபோல் வெளுத்த வூளை
ஊறும் நாசியும் - தட்டி
நெரித்த மாங்கொட்டை போல் ஈ
அரித்த வாயும்
தாறுமாறாய் மீசையிலஞ்
சாறுமயிரும் - தூங்கற்
சண்ணைக் கடாப்போல் நடையும்
மொண்ணை முகமும்
வேறு கீறி ஓட்ட வைத்த
ஏறு காதுமாய் - நேமி
வீரனார் முக்கூடற் பண்ணைக்
காரனார் வந்தார்.

- இப்பாடலின் சுவையை ரசனைக் குறிப்பாகத் தயாரிக்கவும்

**6**

2. *குருஷேத்ரா : ஞாயிறாழ்ச்ச ராத்திரி பிரின்ஸ் ஆறாம் பிறந்நாளில் பூமியுடைகர்ப்பத்தில் நிந்நு ஜீவிதத்திலேக்கு மடங்ஙிஎத்தி. சைனிகருடெ நேத்றுத்துவத்திலுள்ள ரக்ஷா பிற வார்த்தகருடை ஆஷ்றாந்த பரிசிறமத்தின் ஓடுவிலாணு பிறின்சினை உயர்த்தி எடுத்தது. 55 அடியிலேறே தாழ்ச்சயுள்ள குழல் கிணற்றில் 2 ராவும் 2 பகலும் பிரின்ஸ் கழிச்சு கூடேண்டி வந்நு, பதினாறு இஞ்சு வீதியுள்ள குழிக்கு சமாந்திரமாய் உண்டாயிருந்ந கிணற்றில் நிந்நு துரங்கம் தீர்த்தாணு சைனிக சங்கம் குட்டியெ ரட்சப்படுத்தியது.*

- தரப்பட்டுள்ள மலையாளச் செய்தியைத் தமிழில் மொழி மாற்றம் செய்க.
- பத்திரிகைச் செய்தியின் அடிப்படையில் அரசாங்கத்தின் கவனத்தைக் கவரும் வகையில் தலையங்கம் ஒன்று தயார் செய்க.

8

---

3. கீழ்க்காணும் பாடலைப் படித்து, அதில் அமைந்துள்ள பேச்சுவழக்குச் சொற்கள் இரண்டினை எழுதுக. பாடலில் வரும் நாட்டுப்புற வழக்காறுகள் குறித்துக் குறிப்பு வரைக.

ஆனைக்குட்டியைப் போல் - எருமையை
ஞானிச்செட்டி கைக்கே - பணம் பதி
னைஞ்சுக்குக் கொடுத்தான் - கொழுந்தியார்
குஞ்சுக்கிட்டெ டுத்தான்
மீனைக் கொண்டளிப்பான் - கருவாட்
டூனைக் கொண்டொளிப்பான் - நான்சொன்னால்
வீம்புகளடிப்பான் - அவள் சொன்னால்
பாம்பையும் பிடிப்பான்.

6

---

4. நீங்கள் படித்த ஆமைச்சமூகமும் ஊமை முயல்களும் என்ற கதையில் வரும் “அஞ்சலை” என்ற கதாபாத்திரத்துடன் “தலைப்பெருநாள்” என்ற கதையில் வரும் “ஆமினா” என்ற கதாபாத்திரத்தை ஒப்பிட்டுச் சிறு குறிப்பு ஒன்று தயாரிக்க.

அஞ்சலை, ஆமினா கதாபாத்திரங்களை இன்றையச் சமூகத்துப் பெண்களின் நிலையோடு ஒப்பிட்டுப் “இக்காலப் பெண்கள்” என்னும் தலைப்பில் கட்டுரை ஒன்று எழுதுக.

- கீழ்வரும் குறிப்புகளைப் பயன்படுத்துக.
  - ✶ குடும்பங்களில் பெண்கள் நிலை
  - ✶ வேலைபார்க்கும் இடங்களில் பெண்கள் நிலை
  - ✶ கல்வியில் மற்றும் கல்விசாலைகளில் பெண்களின் நிலை

8

---

5 மக்கள் தொகைப் பெருக்கத்துக்கு எதிராக விழிப்புணர்ச்சி ஏற்படுத்தும் ஐந்து முத்திரை வாக்கியங்கள் எழுதுக.

- அவற்றை மனதில் கொண்டு மக்கள் தொகைப் பெருக்கத்தால் ஏற்படும் விளைவுகள் குறித்துக் கட்டுரை எழுதுக.

8

---

6 பின்வரும் பாடல்களைப்படித்து ஒருபக்க அளவில் விமர்சனம் தயார் செய்க. அதனைக் கணையாழி மாத இதழில் வெளியிடும்படி கேட்டுக் கடிதம் ஒன்று வரைக.

www.StudyGuideIndia.com

- வெய்யோன் ஒளி தன் மேனியில் விரிசோதியின் மறைய
  பொய்யோ எனும் இளையாளொடும் இளையானொடும் போனான்
  மெய்யோ மரகதமோ மறிகடலோ மழை முகிலோ
  ஐயோ! இவனோர் அழியா அழகுடையான்! - கம்பராமாயணம்
- கற்பகத்தின்பூங்கொம்போ காமன்தன் பெரு வாழ்வோ
  பொற்புடைய புண்ணியத்தின் புண்ணியமோ புயல் சுமந்து
  விற்குவளை பவளமலர் மதிபூத்த விரைக் கொடியோ
  அற்புதமோ சிவனருளோ அறியேன் என அதிசயித்தார்.
  - சேக்கிழார்

8

---

7. 
- ‘என்பிலதனை வெயில் போலக் காயுமே அன்பிலதனை அறம்’
- ‘தொட்டனைத்து ஊறும் மணற்கேணி மாந்தர்க்குக் கற்றனைத்து ஊறும் அறிவு’
- ‘பீலிபெய் சாகாடும் அச்சிறும் அப்பண்டம் சால மிகுத்துப் பெயின்’

இப்பாடல்களைப்படித்து அணிநயம்பற்றிய ஒரு குறிப்பு வரைக.

**6**

---

8. பேராசிரியர் மா - நயினார் எழுதிய நேர்கோடுகள் என்ற சிறுகதைத் தொகுப்பின் விலை ரூ. 25 மட்டும். இந்நூல் விற்பனைக்கு ஒரு விளம்பரம் தயாரிக்க. இதன் உரிமை ஆசிரியருக்கே. ஆசிரியரின் விலாசம் மா. நயினார். 110, கரமனை, திருவனந்தபுரம். இவ்விளபரத்தை தினத்தமிழ் நாளிதழில் வெளியிடுமாறு கடிதம் ஒன்று எழுதவும்.

**6**

---

9. ‘பிசிப்பிணி என்னும் பாவி அது தீர்த்தோர்
   இசைச்சொல் அளவைக்கு என் நா நிமிராது.’

- இப்பாடலோடு தொடர்புடைய ஒரு பழமொழியை எழுதி, அதனை இன்றைய வாழ்க்கைச் சூழலோடு ஒப்பிட்டு விளக்கக் குறிப்பு எழுதுக.

**4**

---

10. கீழ்வரும் பகுதிகளைப்படித்துக் குடிலனின் உள்ளக்கிடக்கையைத் திறனாய்வுச் செய்க

**குடிலனின் தனி மொழி**

நம் காரியம் ஜெயம் எங் காகினுஞ்செல

முடிதன் அடி வீழில் யாரெடுத்தணியார்

புத்தியே சகல சக்தியும் இதுவரை நினைத்தவை அனைத்தும் நிறைவேறினவே.

www.StudyGuideIndia.com

**சுந்தரம்பிள்ளை குடிலனை அறிமுகப்படுத்துதல்**

ஊன்வரு பெரு நோய்

கெடலறு சூழ்ச்சிக் குடிலனோசாவி.

**6**

---

11. • குளிர்பானங்கள்

• வாகனப்புகை

• தொழிற்சாலைப்புகை, கழிவு

• மதுபானங்கள்

இவற்றின் அடிப்படையில் 'சுற்றுப்புறமும் ஆரோக்கிய வாழ்வும்' என்னும் தலைப்பில் உலக ஆரோக்கியத் தினத்தில் உரையாற்றச் சொற்பொழிவு ஒன்று தயார் செய்க.

**4**

---

12. தேச விடுதலைக்கு முந்திய நிலையோடு ஒப்பிட்டால் முழுக்க முழுக்க இன்று உயர் கல்விக்கு அரசு கூடுதலான வாய்ப்பு வழங்கி வருகிறது. எனினும் உயர் கல்வியில் தன்னிறைவு அடையவில்லை என்பதற்கான காரணங்களை ஆராய்க.

**6**

---

13. • மேகத்தில் இரத்தம்
பூக்களில் மாமிசம்
கத்தியில் கண்ணீர்
வழிந்தன கனவில்
கண்கசக்கி விழிக்கும் முன்
ஜாதிக்கலவரம் - வைரமுத்து

• ஆனாலும் மகனே
வில்லும் வாளும் வேலும் சூலமும்
துப்பாக்கியும் பீரங்கியும் ஏவுகணைகளும்
அழிபசி தீர்க்கும் அமுத சுரபியா - சிற்பி

மேலே கொடுக்கப்பட்டுள்ள கவிதைகளில் கூறப்பட்டிருக்கும் சமுதாயப் பிரச்சனைகளுக்கு எதிராக விழிப்புணர்ச்சி ஏற்படுத்தும் வகையில் அரசு இளைஞர் மேம்பாட்டுத்துறை முகாம் ஒன்று ஏற்பாடு செய்துள்ளது. முகாமில் சொற்பொழிவு ஆற்றுவதற்கு உதவும் வகையில் குறிப்பு ஒன்று தயாரிக்க.

**4**

---

www.StudyGuideIndia.com

# மதிப்பீட்டுக்குறிப்புகள்

# Scoring Key

| வினா எண் | மதிப்பீட்டு குறிப்புகள் | மதிப்பெண் பங்கீடு | மொத்த மதிப்பெண் |
|---|---|---|---|
| 1 | ◆ சுவை கண்டறில் | 1 | |
| | ◆ பொருள் கண்டறிதல் | 1 | |
| | ◆ தனித்தன்மைகள் கண்டறிதல் | 1 | |
| | ◆ குறிப்புகள் எழுதுதல் | 2 | |
| | ◆ மொழி நடை | 1 | 6 |
| 2. | ◆ மொழி மாற்றம் செய்தல் | 3 | |
| | ◆ தலையங்கத் தலைப்பு | 1 | |
| | ◆ கருத்துக்கோவை | 2 | |
| | ◆ கட்டுரை அமைப்பு | 2 | 8 |
| 3. | ◆ இரண்டு நாட்டுப்புறச் சொற்கள் | 2 | |
| | ◆ பொருள் விளக்கம் | 2 | |
| | ◆ கருத்து மாறாமை | 1 | |
| | ◆ மொழி நடை | 1 | 6 |
| 4. | ◆ ஒப்பீடு | 2 | |
| | ◆ பிரச்சனைகளை இனம்காணுதல் | 2 | |
| | ◆ கருத்துகளைத் தொடர்புப்படுத்துதல் | 2 | |
| | ◆ தொகுத்தல் | 1 | |
| | ◆ மொழி நடை | 1 | 8 |
| 5. | ◆ முத்திரை வாக்கியம் | 2 | |
| | ◆ கருத்துகள் | 1 | |
| | ◆ கருத்து ஒருங்கிணைப்பு | 2 | |
| | ◆ மேற்கோள்கள், பழமொழிகள் | 1 | |
| | ◆ வடிவமைப்பு | 1 | |
| | ◆ மொழி நடை | 1 | 8 |
| 6. | ◆ விமர்சனம் | 2 | |
| | ◆ வருணனை | 2 | |
| | ◆ கடிதம் | 2 | |
| | ◆ அமைப்பு | 1 | |
| | ◆ மொழி நடை | 1 | 8 |

| | | | |
|---|---|---|---|
| 7. | ◆ அணிநயம் | 3 | |
| | ◆ கருத்துகள் | 1 | |
| | ◆ வெளியீட்டுத்திறன் | 1 | |
| | ◆ மொழி நடை | 1 | 6 |
| 8. | ◆ விளம்பரம் | 3 | |
| | ◆ அமைப்பு | 1 | |
| | ◆ கருத்துக்கேற்றச் செற்தேர்வு | 1 | |
| | ◆ மொழி அமைப்பு | 1 | |
| | ◆ கடிதம் | 2 | |
| | ◆ அமைப்பு | 1 | |
| | ◆ கருத்து | 1 | |
| | ◆ அமைப்பு | 1 | 11 |
| 9. | ◆ பழமொழி | 1 | |
| | ◆ சூழ்நிலையோடு தொடர்புபடுத்துதல் | 2 | |
| | ◆ மொழி நடை | 1 | 4 |
| 10 | ◆ அமைப்பு | 2 | |
| | ◆ கருத்துகளைப் பகுத்துக்கூறுதல் | 2 | |
| | ◆ முறைப்படுத்துதல் | 1 | |
| | ◆ மொழி நடை | 1 | 6 |
| 11 | ◆ காரண காரியத்தொடர்பு | 1 | |
| | ◆ வெளியீட்டுத்திறன் | 1 | |
| | ◆ கருத்துத்தெளிவு | 1 | |
| | ◆ அமைப்பு, மொழி நடை | 1 | 4 |
| 12. | ◆ காரணக்காரியத்தொடர்பு | 2 | |
| | ◆ பிரச்சனையை ஆயும் திறன் | 1 | |
| | ◆ முறைப்படுத்துதல் | 1 | |
| | ◆ கருத்துத்தெளிவு | 1 | |
| | ◆ மொழி நடை | 1 | 6 |
| 13 | ◆ கருத்துகள் | 1 | |
| | ◆ தொகுத்துரைத்தல் | 1 | |
| | ◆ தொடர்புபடுத்துதல் | 1 | |
| | ◆ மொழி நடை | 1 | 4 |

# வினா பகுப்பாய்வு
# Question wise Analysis

| Qn. No. | Cluster of COs/ Content area (Units) | Mental Process | Type of Qn. | Score | Time |
|---|---|---|---|---|---|
| 1 | அலகு -1<br>பழங்காலத்தமிழ் இலக்கியம் | • நினைவுகூர்தல்<br>• திரும்பக்கூறல்<br>• புதிய சூழ்நிலையில் பயன்படுத்துதல்<br>• கற்பனைத் திறனோடு வெளியிடுதல் | Short Answer | 6 | 10 |
| 2. | அலகு -7<br>கலையும் ஊடகமும் | • புதிய சூழலில் பயன்படுத்தல்<br>• கற்பனைத் திறனோடு வெளியிடுதல்<br>• மதிப்பிடுதல் | Essay | 8 | 15 |
| 3. | அலகு -2<br>இடைக்காலத் தமிழ் இலக்கியம் | • முன்றிவுடன் தொடர்பு படுத்துதல்<br>• ஒற்றுமை வேற்றுமை அறிதல்<br>• காரண காரியத்தோடு தொடர்புபடுத்தல் | Short Answer | 6 | 10 |
| 4 | அலகு -4<br>ஆய்வும் திறனாய்வும் | • முன்னறிவுகளோடு தொடர்புபடுத்துதல்<br>• ஒற்றுமை வேற்றுமை கண்டறிதல்<br>• காரண காரியத்தோடு தொடர்புபடுத்துதல்<br>• மதிப்பிடுதல் | Essay | 8 | 15 |
| 5 | அலகு -3<br>தற்காலத் தமிழ் இலக்கியம் | • நினைவுகூர்தல்<br>• திரும்பக்கூறுதல்<br>• முன் அனுபவங்களோடு தொடர்புபடுத்தி அடிப்படைக் கருத்துகளை உருவாக்குதல்<br>• வகைப்படுத்தல்<br>• ஒழுங்கிணைத்தல்<br>• காரணகாரியத்தோடு தொடர்புபடுத்துதல் | Essay | 8 | 15 |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 6 | அலகு -2<br>இடைக்காலத் தமிழ்இலக்கியம் | • வகைப்படுத்துதல்<br>• ஒருங்கிணைத்தல்<br>• காரணகாரியத்தோடு தொடர்புபடுத்துதல்<br>• பெற்ற அறிவுகளைக் கற்பனைத்திறனோடு வெளியிடுதல் | Others | 8 | 15 |
| 7 | அலகு -5<br>மொழியும் மொழிபெயர்ப்பும் | • நினைவுகூர்தல்<br>• ஒற்றுமை வேற்றுமை கண்டறிதல்<br>• முன்னறிவுடன் தொடர்பு படுத்தி அலசி ஆராய்தல்<br>• பெற்ற அறிவுகளைக் கற்பனைத்திறனோடு வெளியிடுதல் | Short Ans. | 6 | 10 |
| 8. | அலகு - 5<br>மொழியும் மொழிபெயர்ப்பும் | • வகைப்படுத்துதல்<br>• ஒருங்கிணைத்தல்<br>• புதிய சூழ்நிலைகளில் பயன்படுத்துதல்<br>• பல்வேறு ஊடகங்களின் வாயிலாகக் கருத்துப் பரிமாற்றம் செய்தல் | Others | 6 | 12 |
| 9. | அலகு - 5<br>மொழியும் மொழிபெயர்ப்பும் | • நினைவுகூர்தல் திரும்பக்கூறுதல்<br>• முன் அனுபவங்களோடு தொடர்புபடுத்தி அடிப்படைக்கருத்துகளை உருவாக்குதல்<br>• காரணகாரியத்தோடு தொடர்ப்புப்படுத்துதல் | Short Ans. | 4 | 8 |
| 10. | அலகு - 4<br>ஆய்வும் திறனாய்வும் | • நினைவுகூர்தல் திரும்பக்கூறுதல்<br>• முன் அனுபவங்களோடு தொடர்புபடுத்தி அடிப்படைக்கருத்துகளை உருவாக்குதல்<br>• காரணகாரியத்தோடு தொடர்புபடுத்துதல் | Essay | 6 | 12 |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | | • முன்னறிவுடன் தொடர்பு படுத்தி அலசி ஆராய்தல்<br>• மதிப்பிடுதல் | | | |
| 11. | அலகு - 6<br>அறிவியலும் ஆராய்ச்சியும் | • நினைவுகூர்தல்<br>• காரணகாரியத்தோடு தொடர்புபடுத்துதல்<br>• முன்னறிவுடன் தொடர்பு படுத்தி அலசி ஆராய்தல் | Short Ans. | 4 | 8 |
| 12. | அலகு - 6<br>அறிவியலும் ஆராய்ச்சியும் | • நினைவுகூர்தல்<br>• காரணகாரியத்தோடு தொடர்புபடுத்துதல்<br>• முன் அனுபவங்களோடு தொடர்புபடுத்தி அடிப்படைக்கருத்துகளை உருவாக்குதல்<br>• மதிப்பிடுதல் | Essay | 6 | 12 |
| 13 | அலகு - 3<br>தற்காலத் தமிழ் இலக்கியம் | • நினைவுகூர்தல்<br>• முன் அனுபவங்களோடு தொடர்புபடுத்தி அடிப்படைக்கருத்துகளை உருவாக்குதல்<br>• காரணகாரியத்தோடு தொடர்புபடுத்துதல்<br>• பெற்ற அறிவுகளைக் கற்பனைத்திறனோடு வெளியிடுதல் | Short Ans. | 4 | 8 |

www